## மார்ச் – 14 – வியாழன்

**ஆண்டவரே! என் முழுமனத்துடன் உமக்கு நன்றி செலுத்துவேன். திபா. 138:1**

### முதல் வாசகம் : எஸ்தர் (கி) 4 : 17

சாவுக்குரிய துன்பத்தில் துடித்த எஸ்தர் அரசி ஆண்டவரிடம் அடைக்கலம் புகுந்தார் இந்நிலையில்இஸ்ரவேலின் கடவுளாகிய ஆண்டவரை அவர் பின்வருமாறு மன்றாடினார். ”என் ஆன்டவரே! நீர் மட்டுமே எங்கள் மன்னர். ஆதரவற்றவர்களும், உம்மைத்தவிர வேறு துணையற்றவளுமாகிய எனக்கு உதவி செய்யும், ஏனெனில், நான் என் உயிரைப் பணயம் வைத்துள்ளேன். ஆண்டவரே! நீர் எல்லா இனங்கலிலிருந்தும் இஸ்ராயேலைத் தெரிந்தெடுத்தீர் என்றும், அவர்களின் மூதாதையர் அனைவரிடமிருந்தும் எங்கள் முன்னோரை என்றென்றைக்கும் உம் உரிமைச் சொத்தாகத் தெரிந்தெடுத்தீர் என்றும், நீர் அவர்களுக்கு வாக்களித்ததை யெல்லாம் நிறைவேற்றினீர் என்றும், நான் பிறந்த நாள் தொட்டு என்குலத்தாரும், குடும்பத்தாரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆண்டவரே, எங்களை நினைவுகூரும். எங்கள் துன்பவேளையில் உம்மையே எங்களுக்கு வெளிப்படுத்தும். தெய்வங்களுக் ’கெல்லாம் மன்னரே, அரசுகள் அனைத்துக்கும் ஆண்டவரே, எனக்குத் துணிவைத்தாரும். சிங்கத்துக்கு முன் நாவன்மையுடன் பேசும் வரத்தை எனக்கு வழங்கும். எங்களுக்கு எதிராகப் போரிடுபவனை மன்னர் வெறுக்கச் செய்யும். இதனால், அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் அழியச் செய்யும். ஆண்டவரே! உமது கைவன்மையால் எங்களைக் காப்பாற்றும். ஆத.ஃப்ரவற்றவளும் உம்மைத் தவிர வேறு துணையற்றவளுமாகிய எனக்கு உதவி செய்யும்”.

**பதில்பாடல் :** ஆண்டவரே நான் மன்றாடிய நாளில் எனக்குச் செவிசாய்த்தீர்.

### நற்செய்தி : மத்தேயு 7 : 7 - 12

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள் தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில், கேட்போர் எல்லாரும் பெற்றுக் கொள்கின்றனர் தேடுவோர் கண்டடைகின்றனர் தட்டுவோருக்குத் திறக்கப்படும். உங்களுள் எவராவது ஒருவர் அப்பத்தைக் கேட்கும் தம் பிள்ளைக்குக் கல்லைக் கொடுப்பாரா? அல்லது, பிள்ளை மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா? தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார் அல்லவா! ஆகையால் பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே” என்றார்.

**தியானம்:** இன்றைய இறைவார்த்தைகளை நாம் வாசிக்கும் போது கடவுளிடத்தில் நாம் எதை எல்லாம் விசுவாசத்துடன் கேட்கின்றோமோ அதை எல்லாம் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை வெளிப்படுத்துகின்றது. மனிதர்கள் தம் தேவைகளை நிறைவு செய்ய முயன்றாலும் அதில் முழுமையாக வெற்றி பெறுவதில்லை. மனித வாழ்வின் நிறைவு அந்த வாழ்வையும் தாண்டிச் செல்கின்ற ஒன்றாகவே இருக்கின்றது. அந்த நிறைவை நமக்குக் கடவுள் ஒருவரே கொடையாக வழங்க முடியும். நம் அன்றாட வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்யவும் நாம் கடவுளின் உதவியை நாட வேண்டும் என்றும் அவ்வாறு நாம் கடவுளை நாடிச் செல்லும் போது அவர் நமக்கு உதவிசெய்வார் என்றும் இயேசு நமக்குக் கற்பிக்கின்றார். வீட்டில் பிள்ளைகள் தாம் விரும்பும் பொருட்களை தம் பெற்றோர்களிடம் கேட்டுப் பெற்றுக்கொள்வார்கள். இயேசுவுக்கும் அந்த வாழ்வு அனுபவம் இருந்தது எனவே அவர் நம் வானகத் தந்தையாகிய கடவுளை நாம் அவருடைய பிள்ளைகள் என்றும் முறையில் அணுகிச் சென்று நம் தேவைகளை அவரிடம் எடுத்துக் கூறினால் நமக்கு எது நன்மையோ நமக்கு எது தேவையோ அதைக் கடவுள் செய்யாமல் இருக்கமாட்டார் என்று இயேசு கற்பித்தார். எனவே நாம் உரிமையோடு கடவுளை நம் தந்தை என அழைக்கமுடியும் அவ்வாறு அழைக்கும் போது அவர் தந்தைக்குரிய பாசத்தோடு கடவுள் நம் தேவைகளை நிறைவுசெய்வார். ஆனால் இயேசு நம்மிடம் எதிர்பார்ப்பது ஒன்றுதான் நாம் அவருடைய அன்புப் பிள்ளைகளாக வாழ வேண்டும் என்பது தான் அதை நம் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்வோமாக ஆமென்.